**25. அத்திபதி கதை**

அத்திபதி என்பவன் காந்தார நாட்டில் இருந்த ஒரு வேந்தன். நற்குணங்கள் யாவும் நன்கு அமையப் பெற்ற வன். இவன் இருந்து அரசாண்ட நகரின் பெயர் இடவயம் என்பர். இம் மன்னன் பிரம தருமர் என்னும் பீடுசால்



முனிவர்ஒருவரைத் தனக்கு நாளும் உறுதுணையாகக் கொண்டிருந் தான். அம்முனிவர் முக்கால நிகழ்ச்சிகளையும்வழுவறத் தெளிந்தவர். அறிவும் பெருமையும் அமையப் பெற்றிருந்த அம்முனிவரால் இம்மன்னன் நன்மைகள்அடைந்தான். பலவற்றை அவர் ஒரு நாள் இம்மன்னனைப் பார்த்து, "இற்றைக்கு ஏழாம் நாள் ஈண்டு நில நடுக்கம்உண்டாகும். இந் நகரும் நாடும் நிலத்தில் அமிழ்ந்து ஒழிந்து போகும்.நீ உன் குடிகளோடு இடம் பெயர்ந்துவேறு யாண்டேனும் விரைந்து செல்க" என்று அறிவுரை கூறினார். அம்மன்னனும் அவ்வாறே வேறிடஞ்சென்றான். அருந்தவர் குறிப்பிட்ட நாளில் இருந்த இடம் நிலத்தில் ஆழ்ந்து மறைந்தது. அறிவுடையார் கேண்மையை உறுதுணையாகக் கொண்டிருந்த படியால் இம்மன்னன் குடிகளோடு உயிர் பிழைத்தான். அறநெறிகளை நன்குணர்ந்து முதியவராக உள்ள பெரியாருடைய நட்பை ஆராய்ந்து மேற்கொண்டால் தீமையொன்றும் நேராமல் உய்யலாம் என்பதை இம் மன் னன் உலகிற்கு உணர்த்தி நின்றான்.

[பெரியாரைத்துணைக்கொள்ளுதல்]